# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13125/SCIC/2025**

திரு.S. மதியழகன், த/பெ.சித்துராஜ் - மேல்முறையீட்டாளர்
எண்.1-130, முருங்கப்பட்டி
சிவதாபுரம் வழி - 636 307
சேலம் மாவட்டம்
Phone: 96008 16747.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
நேர்முக உதவியாளர்
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்
சேலம் (மேற்கு) - 636 005.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **22.04.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.05.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 24.05.2025 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 28.08.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 22/04/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சேலம் (மேற்கு) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "நான் TN 30 AS 9641-க்கு வாகனத்திற்கு பதிலாக KL 10 AA 1524 ஐ வாகன வகை மாற்றம் செய்து தர 08/04/2025 அன்று இரண்டு வாகனங்கள் தொடர்பாக அனைத்து ஆவணங்களும் மற்றும் மேற்கண்ட வாகனம் KL 10 AA 1524 ஐ மறுபதிவு செய்து தரக் கோரி அனைத்து ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டதால் மேற்கண்ட வாகனங்களின் அனைத்து ஆவணங்களையும் சான்றொப்பம் செய்த நகல்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.S.மதியழகன் அவர்கள் தேனி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.மு.சுகுமாறன், கண்காணிப்பாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சேலம் (மேற்கு) அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 15/05/2025 தேதியிட்டு பதில்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனக்கு அனுப்பப்பட்ட பதில் தவறானது என்றும் தான் TN 30 AS 9641 என்ற வாகனம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், மேற்குறிப்பிட்ட வாகனம் குறித்த கோப்பு காணாமல் போய்விட்டதாகவும், அதனை கண்டுபிடிக்க இயலவில்லை எனத் தெரிவித்தார். விசாரணையின்போது மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்வதாகவும், அதன் விளைவாக, தான் பாதிப்புக்கு ஆளாகியிருப்பதாகவும் தெரிவித்தார். அது குறித்து அவர், துறையின் உயர் அதிகாரிகளை அணுகலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், தனக்கு 08/04/2025 மற்றும் 15/04/2025 தேதிய CCTV Footage நகல் அளிக்கப்பட வேண்டுமென்றும் கோரினார். பொதுத் தகவல் அலுவலர், தமது அலுவலக ஆவணங்களின்படியான தகவலையே 15/05/2025 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். **எனினும், மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு (வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சேலம் (மேற்கு)) 13/08/2026 அன்று காலை 11.00 மணிக்கு செல்ல வேண்டுமென்றும், பொதுத் தகவல் அலுவலர்/ நேர்முக உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சேலம் (மேற்கு) அவர்கள், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ல் கோரிய மனுவிற்கு தொடர்பான ஆவணங்களை / பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்யத் தேவையான உதவிகளைச் செய்வதோடு, மனுதாரர் கோரியவாறு 08/04/2025 மற்றும் 15/04/2025 தேதிய CCTV Footage பராமரிப்பில் இருப்பின் அதன் நகலினையும் மற்ற ஆவணங்களின் நகல்களையும், மனுதாரருக்கு அன்றே (13/08/2026) அளிப்பதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை (Compliance Report) 31/08/2026-க்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13125/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
நேர்முக உதவியாளர்
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்
சேலம் (மேற்கு) - 636 005.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S. மதியழகன், த/பெ.சித்துராஜ்
எண்.1-130, முருங்கப்பட்டி
சிவதாபுரம் வழி - 636 307
சேலம் மாவட்டம்
Phone: 96008 16747.

RG/Sr.PC